
சென்னை
செவ்வாய்
நவம்பர் 18, 2025
மாணவர் பதிப்பு

# தினமலர்

75 பவள விழா ஆண்டு

விலை ரூ.3/-

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்
www.dinamalar.com



# உழைப்பின் அடையாளம்

தன் மகனுடைய சோம்பேறித்தனம் நீங்கியது என்பதை பெரியவர் எப்படி புரிந்துகொண்டார்?

தெரிந்துகொள்ள பக்கம் 5க்கு வாங்க!

பட்டம்

03 • தூரத்து விண்மீன்கள் சொல்லும் கதை
04 • பண்டைய இந்திய நகரங்கள்
06 • முப்பெரும் மின்னணு சக்திகளின் பங்களிப்பு!
07 • இரு ரேகைகளும் வறட்சியும்
08 • நயம் நயம் நாட்டுப்புறம்
09 • காலைத் தூக்கி ஆளைத் தாக்கும் வித்தை!

## 6 – 8 வகுப்புகளுக்கு பையில்லா நாட்கள்!



**உ**த்தரப் பிரதேச மாநில அரசுப் பள்ளிகளில், 6 முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு, ஓராண்டில் 10 நாட்கள், 'பையில்லா நாட்கள்' ஆக, மாநில அரசு அறிவித்துள்ளது. இந்த முயற்சியின் முக்கியமான நோக்கம், மாணவர்களின் புத்தகச் சுமையை குறைத்து, செயல்பாடு சார்ந்த கற்றல், அனுபவப்பூர்வமான கல்வி என, கற்றலை மேலும் சுவாரஸ்யமாக மாற்றுவதுதான். தேசிய கல்விக் கொள்கையின்படி (NEP), மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கௌன்சில் (SCERT) இதற்காக, 'ஆனந்தம்' (மகிழ்ச்சியான கற்றல்) என்ற வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளது.

## புதிய கண்டம் கண்டுபிடிப்பு!




**'ஸீ**லாண்டியா' என்ற புதிய கண்டத்தை நியூசிலாந்து விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். கிட்டத்தட்ட 37.5 கோடி ஆண்டுகளாகக் கடலுக்கு அடியில் மறைந்திருந்தது இந்த நிலப்பரப்பு, 50 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. ஒரு கண்டம் என்பது கடல் மட்டத்திற்கு மேலே நிலப்பரப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்ற பாரம்பரிய வரையறையை இந்த கண்ட அமைப்பு உடைத்துள்ளது. இதன் 94 சதவீதம் கடலுக்கு அடியில் மூழ்கி கிடந்தாலும், அதன் மேலோட்டின் தடிமன், கலவை மற்றும் டெக்டோனிக் பரிணாம வளர்ச்சியைப் பொறுத்து, தற்போது புதிய கண்டமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## துபாயில் விமானக் கண்காட்சி

**து**பாயில் இரண்டு நாள் விமானக் கண்காட்சி நடக்கிறது. இந்தக் கண்காட்சியில், 150 நாடுகளில் இருந்து, 1500 நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. இந்திய விமானப்படையினரின் சூரியகிரண் ஏரோபேட்டிக் அணியினர் சாகச நிகழ்ச்சி நடத்துகின்றனர். தேஜஸ் போர் விமானங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. இந்தியாவின் மத்திய அமைச்சர் சஞ்சய் சேத், நம் விமானப்படை சார்பில் 50 நாடுகளை சேர்ந்த நிறுவனத்தினருடன் பேச்சு நடத்துகிறார். பாதுகாப்பு ஒத்துழைப்பு, தொழில்நுட்ப மேம்பாடு, உற்பத்தி தொடர்பாக இந்தப் பேச்சு வார்த்தை அமையும். நேற்று தொடங்கிய இந்தக் கண்காட்சி இன்றும் நடக்கிறது.



## கடல் மட்டத்தை கண்காணிக்கும் செயற்கைக்கோள்



**ஸ்**பேஸ்எக்ஸ் நிறுவனம், அமெரிக்க நாசாவின் சென்டினல் – 6B (Sentinel – 6B) என்ற செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியுள்ளது. சென்டினல் – 6B என்பது பூமியைக் கண்காணிக்கும் செயற்கைக்கோள். உலகளாவிய கடல் மட்ட உயர்வு மற்றும் கடலின் நிலையைத் துல்லியமாக அளவிடுவதே இந்தச் செயற்கைகோளின் முதன்மைப் பணியாகும். இது 30 ஆண்டுகளுக்கும் மேலான கடல் மட்டத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. பூமியின் கடற்பரப்பில் கிட்டத்தட்ட 90 சதவீதப் பகுதியின் தகவல்களை வழங்கவுள்ளது. இதன் மூலம் பெறப்படும் தரவுகள், வானிலை முன்னறிவிப்புகள், குறிப்பாக புயல் உருவாக்கம் மற்றும் தீவிரமடைதல் குறித்த கணிப்புகளை மேம்படுத்தும்.

## Schools In Australia, New Zealand To Close

Asbestos is a prohibited substance in Australia and New Zealand that can cause several types of cancer when its fibres are inhaled or ingested. The sand products used in sensory play at school were sold by retailers in Australia between 2020 and 2025. More than 70 schools in Australia and New Zealand were closed on Monday for cleaning after asbestos was discovered in widely used children's play sand products. Recalls have been issued for several colourful play sand products after laboratory testing detected traces of tremolite and chrysotile asbestos.




தினமலர் அலுவலக நேரம்: காலை 9:30 – மாலை 6:00 மணி
★ 588, கண்ணப்பன் தெரு, சின்ன காஞ்சிபுரம்–631 501 044 - 2723 4224
★ பிளாட் எண் 66, 2வது குறுக்குத்தெரு, அய்யனார் அவென்யூ, திருவள்ளூர்–602 001 044 - 2766 3129

DINAMALAR-National Tamil Daily e-mail: dmrcni@dinamalar.in
Edited, Printed and Published by Dr.K.Ramasubbu, on behalf of Dinamalar at New Standard Press, T.V.R. House, Medavakkam, Chennai - 600 100
Administrative Office: 39, Whites Road, Chennai-600 014.
Advt e-mail: dmrae@dinamalar.in Ph 044 - 2854 0001 - 03
Joint Managing Editor Dr.R.Lakshmipathy RNI No.33618/79

பட்டம்
பொறுப்பாசிரியர்: ஆர்.வெங்கடேஷ். ஆசிரியர் குழு: ரமேஷ் வைத்யா, இ.எஸ்.லலிதாமதி, ம.பா.காந்திராமன், எஸ்.மைதிலி, எஸ்.நித்தியானந்தம்.
வடிவமைப்பு: பா.ஸ்டீபன், த.கார்த்திகேயன். ஓவியங்கள்: ஈ.பிரகாஷ்.
முகவரி : பட்டம், தினமலர், 69, திரு.வி.க. ஹைரோடு, ராயப்பேட்டை, சென்னை– 600 014.
மின்னஞ்சல் : pattam@dinamalar.in தொலைபேசி : 98410 53881.

திங்கள் முதல் வெள்ளி வரை பள்ளிகளுக்கு மொத்தமாக வரவழைக்க, சந்தா விவரங்களுக்கு
சென்னை : 98843 91342 | 99443 09681 | 97511 36644

# தூரத்து விண்மீன்கள் சொல்லும் கதை

சிந்துபாத் கதைகளைப் படித்திருக்கிறீர்களா? சாகசங்கள் நிறைந்தவை.

ஒருமுறை சிந்துபாத், பாக்தாத்தில் இருந்து கப்பலில், தன் பரிவாரங்களுடன், வேறொரு நாட்டுக்கு வியாபாரம் செய்ய புறப்படுவார். அங்கே நடுக்கடலில், கப்பல் உடைந்துவிடும். தண்ணீரில் அனைவரும் நீந்தி அருகிலிருக்கும் சிறிய தீவை அடைந்து அதன் மேல் உட்கார்ந்துக் கொள்வார்கள். அந்த நேரத்தில், திடீரென்று தீவு நகர ஆரம்பிக்கும்.

அப்போது தான் தெரியும், இவர்கள் தீவின் மேல் அமரவில்லை, திமிங்கிலத்தின் மேல் அமர்ந்திருக்கிறார்கள் என்று.

அப்புறம் என்ன, அலறியடித்துக் கொண்டு அனைவரும் தண்ணீரில் குதிப்பார்கள்.

எவ்வளவு சுவாரசியமான கதை இது.

ஆனால் உங்களுக்கு ஓர் உண்மையை சொல்லட்டுமா? நாம் உட்கார்ந்திருக்கும் இந்தப் பிரபஞ்சவெளியும் (Space) இதைப் போலத்தான் நகர்ந்து கொண்டு இருக்கிறது.

இந்த மாலுமிகள் போல நாமும், இந்த பிரபஞ்சவெளியில் அமர்ந்துகொண்டு, நகர்ந்து கொண்டிருக்கிறோம்.



சிந்துபாத் கதை மாதிரிப் படம்

ஏனென்றால், தோன்றிய நாளில் இருந்து, இந்த பிரபஞ்சம் விரிந்துக்கொண்டே தான் இருக்கிறது. நாமும் அதன் மேல் அமர்ந்துக்கொண்டு, அதன் கூடவே பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.

**கற்பனை செய்யுங்கள்!**

இந்தப் பிரபஞ்சவெளியை (Space) ஒரு பலூனாகக் கற்பனை செய்துக்கொள்ளுங்கள்.

அதில்மேல் சில புள்ளிகளை இடுங்கள்.

இப்போது ஒவ்வொரு புள்ளியையும் ஒரு விண்மீன் மண்டலமாகக் (Galaxy) கருதலாம்.

அடுத்து, பலூனை ஊதுங்கள்.

பலூன் பெருசாக பெருசாக, பலூனின் மேலே, அருகருகே இருக்கும் புள்ளிகள், ஒன்றை விட்டு ஒன்று தூரமாகப் போகுமல்லவா?



அப்படித்தான், விரிந்துக்கொண்டிருக்கும் இந்த பிரபஞ்ச வெளியில், நம் விண்மீன் மண்டலத்தை (Galaxy) விட்டு, அடுத்த விண்மீன் மண்டலம் ரொம்ப தூரம் போய்க் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில், நம்முடைய விண்மீன் மண்டலமும் தூரமாக விலகிப் போகிறது!

**கண்டுபிடிப்பு!**

இதை முதன்முதலில் கண்டுபிடித்தவர் எட்வர்ட் ஹபுள் (Edward Hubble). அமெரிக்க விண்வெளியாளர்.

அடுத்த, விண்மீன் மண்டலம், நம்மை விட்டு தூரப் போகும்போது, அதனிடம் இருந்து வெளிப்படும் ஒளியின் அலைகளும் விரிவதால், அதன் ஒளி, நிறமாலையின் (Colour



எட்வர்ட் ஹபுள்

Spectrum) சிவப்பு முனையை (Red end) நோக்கி நகரும். இதைச் சிவப்பு நகர்வு (Red Shift) என்று சொல்வார்கள். அதனால், நம்மை விட்டு தூரமாகச் செல்லும் பால்வெளி மண்டலத்தில் இருந்து வரும் ஒளி, நமக்கு சிவப்பாகத் தெரியும்.

1920இல் நம்மைச் சுற்றி இருக்கும் அனைத்து பால்வெளி மண்டலங்களும், சிவப்பாகத்



சிவப்பாகத் தெரியும் பால்வெளி மண்டலத்திலிருந்து வரும் ஒளி.

தெரிவதைக் கண்ட எட்வர்ட் ஹபுள், அவை நம்மை விட்டு விலகிப்போவதை அறிவித்தார். இது பின்னாளில் ஹபுள் விளைவு (Hubble's Effect) என்று பெயரிடப்பட்டது.

**ஹபுள் விளைவின் முக்கியத்துவம்?**

1,380 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, இந்தப் பிரபஞ்சவெளி, ஒரு சிறிய புள்ளியாக இருந்தது. பின்னர் அது ஒரு பெருவெடிப்பில் (Big Bang) வெடித்து, எல்லாப் பக்கமும் விரிந்து கொண்டே இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக ஹபுள் விளைவு இருக்கிறது.

மேலும் இதேபோல, எதிர்காலத்தில் இந்த பிரபஞ்சவெளி விரிய விரிய, வெப்பம் குறைந்துக்கொண்டே போகும் என்று விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள்.

இப்போது உங்களுக்கு ஒரு கேள்வி, ஏன் இரவு வானம் வெளிச்சமாகத் தெரிவதில்லை?

– என். சுஜாதா நடராஜன்

கட்டுரை தொடர்பான உங்கள் கருத்துகளை mathpattam@gmail.com என்ற இமெயில் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

# பொருளறிவியலுக்கான இன்ஃபோசிஸ் பரிசு யாருக்கு?

கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனத்தின் வேதி–பொறியியல் பேராசிரியர் கார்த்திஷ் மந்திரம் (Karthish Manthiram). அத்தியாவசிய ரசாயனங்களை உற்பத்தி செய்ய, நிலையான மின் வேதியியல் வழிகளை உருவாக்கியதற்காக, இந்த ஆண்டுக்கான பொருளறிவியல் (Physical Science) இன்ஃபோசிஸ் பரிசு இவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**பரிசுக்கான முக்கிய காரணங்கள்:**

- கார்த்திஷ் மந்திரத்திற்கு இன்ஃபோசிஸ் பரிசு அறிவிக்கப்பட்டதற்கான முக்கிய காரணம், புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தைப் பயன்படுத்தி, தொழில்துறை மற்றும் விவசாயத்திற்குத் தேவையான ரசாயனங்களை சுத்தமாகவும், திறமையாகவும் தயாரிக்கும் முறையை தனது ஆராய்ச்சி மூலம் வெளிபடுத்தினார்.
- லித்தியம் கலந்த அம்மோனியா தொகுப்பு மற்றும் ஆக்ஸிஜன் அணு பரிமாற்ற வினையூக்கம் (Oxygen atom transfer catalysis) உள்ளிட்ட ஆராய்ச்சிகளில் சிறந்து விளங்கி வருகிறார். அவரது இந்த கண்டுபிடிப்புகள், மின்மயமாக்கப்பட்ட ரசாயன உற்பத்தியைப் பற்றிய நமது புரிதலை மேம்படுத்துகின்றன.
- நைட்ரஜன் ($N_2$), கார்பன் டை ஆக்சைடு ($CO_2$), மற்றும் நீர் ($H_2O$) போன்ற எளிமையான மூலக்கூறுகளில் இருந்து முக்கியமான ரசாயனங்களை மின்சாரம் மூலம் தயாரிக்க முடியும் என்று நிரூபித்துள்ளார் மந்திரம்.
- இவரது பணி, வேதியியல், பொறியியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது. அதுமட்டுமல்லாமல், மனித சமுதாயத்திற்கும் மகத்தான மாற்றத்தைக் கொண்டுவரும் ஆற்றலைக் கொண்டுள்ளது.




கார்த்திஷ் மந்திரம்

# பண்டைய இந்திய நகரங்கள்

இந்திய வரலாற்றில் சில நகரங்களுக்கு தவிர்க்க முடியாத இடம் உள்ளது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.


காஞ்சி நகரில் உள்ள கைலாசநாதர் கோயில்


காசி (பனாரஸ்)பல்கலைக் கழகம்

### மதுரா

உத்தரப்பிரதேசத்தில் உள்ளது. ஹிந்து, பௌத்த, சமண சமயங்களுக்கு முக்கிய இடம் உண்டு. இது குஷானர்கள், குப்தர்கள் ஆட்சியில் போற்றத்தக்க நிலையில் இருந்தது. தமிழ்நாடு, கடல் கடந்ததும் மதுராவின் புகழ் பரவி இருந்தது. தமிழ் இலக்கியங்களில் வடமதுரை என குறிப்பிடப்படுவது இதுவே.

### பாடலி

இன்றைய பீகாரின் தலைநகரான பாட்னாவின் பழைய பெயர் பாடலிபுத்திரம். மௌரியர், குப்தர் முதலிய பேரரசுகளின் தலைநகரம். இங்கு பிறந்த எழுத்து முறை, நாகரி என்று அழைக்கப்படுகிறது. 'பொன் மலி பாடலி' (குறுந்தொகை 75) என்றும் 'சீர் மிகு பாடலி' (அகநானூறு 265) என்றும் சங்க இலக்கியங்கள் இந்த நகரத்தைப் புகழ்கின்றன.

### வாரணாசி

இது பண்டைய காசி ஜனபதம் நாட்டின் தலைநகரம். கோயில்கள், பட்டு நெசவுக்குப் பெயர் பெற்ற இது, முக்கியமான கல்வி மையமாகவும் திகழ்ந்துள்ளது. அதன் தொடர்ச்சியாகவே இங்கு பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. சங்க இலக்கியமான கலித்தொகை (பாடல் 60) இந்த நகரத்தை 'வாரணவாசி' என்று குறிப்பிடுகிறது.

### துவாரகை

தமிழ் இலக்கியங்களில் இது துவரை என்று அழைக்கப்படுகிறது. அந்த நகரத்தாரை அகத்தியர் தமிழகத்திற்கு அழைத்து வந்ததாக உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகிறார். இந்த நகரத்தின் நினைவாகத் தான், ஹொய்சாள அரசர்கள் (கர்நாடகம்) தங்கள் தலைநகருக்கு, 'துவர சமுத்திரம்' என்று பெயரிட்டனர்.


அமராவதி புத்த சிற்பங்கள்


மதுரா நகரத்து பண்டைய சிற்பம்



தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்த மதுரா

### அமராவதி

வரலாற்றின் படி சாதவாகனர்களின் தலைநகரமாக அமராவதி (ஆந்திர மாநிலம்) இருந்தது. இது குறைந்தது 2,300 ஆண்டுகள் பழமையானது. பண்டைய காந்தார, மதுரா சிற்பக் கலைப் பள்ளிகளைப் போலவே அமராவதி கலைப் பள்ளியும் மிகவும் புகழ்பெற்றது. இதற்கு சாட்சியாக இன்றும் அமராவதியில் பௌத்த மதம் தொடர்புடைய கட்டடங்கள், சிற்பங்கள், ஸ்துாபிகள் உள்ளன.

### உஜ்ஜைனி

இது அவந்தி நாட்டின் தலைநகரம். மௌரிய, குப்த பேரரசர்களின் போற்றுதலுக்குரிய நகரமாக இருந்துள்ளது. மகாகவி காளிதாசர் இங்கு வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. அத்துடன் பண்டைய இந்திய வானியல் செழித்த நகரம். காரணம் இது சரியாக கடக ரேகையில் அமைந்திருப்பதே. பழங்காலத்தில் வானியல் சார்ந்த சோதனைகள் இங்கு நடத்தப்பட்டு பஞ்சாங்கம் எழுதப்பட்டது.

### காஞ்சிபுரம்

பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரம் கல்வியின் மையமாக இருந்துள்ளது. தமிழகத்தில் புத்த மதம் செழித்திருந்த நகரங்களில் முக்கியமான நகரம் இது. இதன் புகழ் வட இந்தியா வரை பரவியிருந்தது.

### மதுரை

பாண்டியர்களின் தலைநகரமான மதுரை சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த ஊர். இங்குள்ள புகழ்பெற்றது அழகர் கோவில் மலை. தென் தமிழகத்தின் சிறந்த வணிக மையமாக இருந்த மதுரை பற்றி வெளிநாட்டு பயணிகள் பலர் வியந்து எழுதியுள்ளனர்.

**–பார்கவ ராமன்**

# கல்வெட்டில் தோசை

சாமிக்கு தோசை படையலாக வைத்த செய்தி, காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் கல்வெட்டில் உள்ளது.



கல்வெட்டுகளில் இந்தக் கோயில் இறைவன், நின்றருளிய அருளாளர் பெருமாள், பேரருளாளப் பெருமாள் என்று குறிப்பிடப்படுகிறார். கோயில் அமைந்துள்ள இடம் திருவத்தியூர், அத்திகிரி என்று உள்ளது.

கோயிலில் 300க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்ட பொன், பொருள், நிலம், காய்கறி, உப்பு, புளி போன்ற பொருட்களுடன், படையலிட்ட இட்லி, தோசை, வடை, அப்பம், பணியாரம், அதிரசம் ஆகியவையும் கல்வெட்டில் உள்ளன. கோயில் பணியாளர்கள் 35 பேருக்கு, தோசை வழங்கப்பட்ட தகவல் விஜயநகர அரசர் அச்சுத தேவ மகாராயர் (*Achyuta Deva Raya*) கல்வெட்டில் (காலம் 1529–1542) உள்ளது.

தோசைக்குத் தேவையான பொருட்களையும் கல்வெட்டு கூறுகிறது. கிரந்தமும் தமிழும் கலந்த மொழியில் கல்வெட்டு உள்ளது.

**–கோ.செங்குட்டுவன்**


### கிரந்தம் என்பது

*சமஸ்கிருத வார்த்தைகளைத் தமிழில் எழுதுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஓர் எழுத்து முறை கிரந்தம். தமிழ் மொழியின் ஒலி அல்லாது, வடமொழியின் ஒலிவரும் இடங்களிலும், வடமொழிச் சொல்லை எழுத நேர்கின்ற இடங்களிலும், கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்தினர். இது பல்லவ கிரந்தம் என்றும் அழைக்கப்படுகிறது.*


தோசை என்ற வார்த்தை உள்ள கல்வெட்டு.

# சோம்பேறியின் பெருமை

நாரா.நாச்சியப்பன்



ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினான்.

நீண்ட நெடுங்காலத்திற்கு முன் குன்றக்குடியில் சங்கரன் என்ற பெரியவர் இருந்தார். சங்கரன் பெரிய பணக்காரர். அவருக்கு வீடு, நிலம், தோட்டம், சொத்து எல்லாம் இருந்தன. ஆனால் ஒரே ஒரு குறை மட்டும் இருந்தது. அவருடைய ஒரே மகன் கணபதி பெரும் சோம்பேறியாக இருந்தது தான் அந்தப் பெரிய குறை.

தன்னிடம் நிறைய சொத்து இருந்தாலும் தன் மகன் கணபதி உழைப்பை வெறுப்பவனாக இருப்பது சங்கரனுக்குத் துன்பமாய் இருந்தது.

'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' என்று பழமொழி சொல்வார்கள். சோம்பேறியான தன் மகன் பிற்காலத்தில் தன் சொத்துக்களைக் காப்பாற்ற முடியாமல், துன்பப்படுவானே என்று நினைத்துப் பார்க்கவே அவருக்கு வருத்தமாய் இருந்தது.

இதே கவலையாய் அவர் நோய் உற்றுப் படுத்துவிட்டார்.

அவரை ஊர்ப் பெரிய மனிதர்கள் பலர் வந்து பார்த்தும் போயினர். அவர் உடம்பை ஆய்ந்து பார்த்த மருத்துவர், அவருக்கு 'உடல் நோய் எதுவும் இல்லை என்றும், மனநோய்தான் அவரை வருத்துகிறது' என்றும் கூறினார். உடனே அந்தப் பெரியவர்கள் அவருடைய கவலை என்ன என்று கேட்டார்கள். தன் மகனைப் பற்றிய கவலையை அவர் வெளியிட்டார்.

"ஐயா, என் மகன் சோம்பேறியாய் இருப்பது தான் எனக்குக் கவலையளிக்கிறது. என்றாவது ஒரு நாள் என் மகன் உழைத்துப் பொருள் ஈட்டி ஒரு ஐந்து ரூபாய் கொண்டு வந்து கொடுத்தால் கூடப் போதும். என் கவலை ஒழிந்து போகும். உழைத்துப் பிழைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் அவனுக்கு வந்துவிட்டது என்று தெரிந்தால்தான் என் கவலை தீரும்" என்றார் சங்கரன்.

இரண்டு நாட்கள் கழித்து அவர் மகன் கணபதி தந்தை படுத்திருக்கும் அறைக்கு வந்தான்.

"அப்பா" என்று குழைவாக அழைத்தான். சங்கரன் அவனைக் கூர்ந்து நோக்கினார்.

மகன் கணபதி ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினான். "அப்பா இது என் பணம். நான் உழைத்துத் தேடிய பணம். வைத்துக் கொள்ளுங்கள்" என்று நீட்டினான்.

சங்கரன் அவனை வெறித்து நோக்கினார்.

"ஆம் அப்பா. வயலில் நேற்று நாற்று நட்டேன். அதற்குக் கூலியாகப் பெற்ற பணம் தான் இது. வாங்கிக் கொள்ளுங்கள் அப்பா" என்று மகன் ரூபாய் நோட்டை நீட்டினான்.

சங்கரன் அந்த நோட்டை வாங்கினார்: சுக்கல் சுக்கலாகக் கிழித்தார். குப்பைக் கூடையை நோக்கி வீசினார்.

"நீ சோம்பேறியாக மட்டும் இல்லை; பொய்யனாகவும் மாறிவிட்டாய்!" என்று பெருந்துயரத்தோடு கூறினார். அப்படியே மயக்கம் போட்டுச் சாய்ந்துவிட்டார். உடனடியாக மருத்துவருக்கு ஆளனுப்பி, அவருடைய மயக்கத்தைத் தெளிவிக்க ஐம்பது ரூபாய் செலவாயிற்று.

கணபதி அந்த ஐந்து ரூபாயை உழைத்து ஈட்டவில்லை. தன் மாமாவிடம் இலவசமாக வாங்கி வந்தான். அறுவடை செய்ய வேண்டிய காலத்தில் நாற்று நட்டதாகப் பொய் சொன்னால் தந்தை எப்படி நம்புவார்? அதனால்தான் கிழித்து எறிந்தார்.

சில நாட்கள் கழிந்தன. மீண்டும் கணபதி அப்பாவிடம் வந்தான்.

அப்போதும் அவன் கையில் ஐந்து ரூபாய் நோட்டு இருந்தது.

"அப்பா, உண்மையில் நான் உழைத்துத் தேடிய பணம் இது. வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினான்,

சங்கரன் அவனைக் கூர்ந்து நோக்கினார்.

"கட்டடம் கட்டும் இடத்தில் செங்கல் தூக்கிக் கொடுத்துக் கூலியாக வாங்கி வந்த பணம் இது" என்றான் கணபதி.

சங்கரன் அந்த நோட்டை வாங்கி அப்படியே கிழித்துக் குப்பையில் போட்டார். உண்மையில் அந்தப் பகுதியில் யாரும் அப்போது கட்டடம் கட்டவில்லை. தந்தையின் நண்பர் ஒருவரிடம் கணபதி கெஞ்சி வாங்கிய பணம் அது.

"இனி உன்னை நான் நம்ப மாட்டேன். என்னிடம் வராதே" என்று கடுமையாகச் சொன்னார் சங்கரன். இவன் எப்படிப் பிழைக்க போகிறான் என்ற எண்ணமே அவரை மேலும் நோய்க்கு உள்ளாக்கியது.

பத்து நாள் கழித்து மீண்டும் கணபதி சங்கரன் அறைக்கு வந்தான். அப்போது அவர் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாய் இருந்தது.

கணபதி கண்களில் நீர் வழிய தந்தையை நோக்கினான். "அப்பா என்னை நம்புங்கள். நான் திருந்திவிட்டேன். இதோ இந்த ஐந்து ரூபாய் நான் உண்மையில் உழைத்துப் பெற்ற பணம்" என்று

வெறுப்போடு சங்கரன் அந்த நோட்டைப் பிடுங்கினார். அதைக் கிழிக்கப் போனார்.

"அப்பா, அப்பா, கிழிக்காதீர்கள். உங்கள் மகனின் உண்மையான உழைப்பு அது" என்று அவர் கையைப் பற்றினான் கணபதி.

அவன் கைகள் அவரைத் தொட்டவுடன் சங்கரன், அது உண்மையான உழைப்புதான் என்பதைப் புரிந்து கொண்டார். ஏனெனில் கணபதியின் கைகள் காய்த்துப் போயிருந்தன. கல்லுடைத்துக் கல்லுடைத்து அவன் கைகள் காய்த்துப் போயிருந்தன. கைகளால் அவன் தன்னைத் தொட்டவுடன் சங்கரன் அதைப் புரிந்து கொண்டார்.

அந்தக் கைகளை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டார். "மகனே, நீ திருந்தி விட்டாய். இனி நான் மன நிறைவோடு சாவேன்" என்றார்.

ஆனால் உண்மையில் அவர் அப்போது சாகவில்லை. சில நாட்களில் அவர் குணம் அடைந்துவிட்டார். நீண்ட நாட்கள் உயிரோடு இருந்தார். மகன் பொறுப்புடன் உழைத்து மேலும் தன் செல்வத்தைப் பெருக்கியதைக் கண்டு மனநிறைவுடன் வாழ்ந்தார்.

கணபதியும் பெரிய மனிதர்கள் பாராட்டும் சிறந்த பிள்ளையாக வளர்ந்து, பெருமையும் செல்வாக்கும் பெற்று விளங்கினான். ●

# முப்பெரும் மின்னணு சக்திகளின் பங்களிப்பு!



மின்னணு ஊடகத்தில், வானொலி, தொலைக்காட்சி மற்றும் திரைப்படம் ஆகியவை வகிக்கும் பங்களிப்புகள் மிகவும் முக்கியமானவை. இவை ஒவ்வொன்றும், தனித்துவமான சிறப்புகளைக் கொண்டவை.

## வானொலி

மின்னணு ஊடகங்களின் முன்னோடி, வானொலி தான். இது, கேட்கும் பண்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.

**விரைவான தகவல் தொடர்பு:** செய்திகள், பேரிடர் குறித்த தகவல்கள் மற்றும் அவசர அறிவிப்புகளை விரைவாகவும், குறைந்த செலவிலும் மக்களைச் சென்றடையச் செய்கிறது.

**அதிக அணுகல்:** மின்சாரம் இல்லாத அல்லது இணைய வசதி இல்லாத கிராமப்புறங்கள், தொலைதூரப் பகுதிகள் மற்றும் ஏழை மக்கள் உட்பட பரவலான மக்களை எளிதில் சென்றடையும் ஊடகமாக உள்ளது.

**கல்வி மற்றும் விழிப்புணர்வு:** வேளாண்மை தொடர்பான அறிவுரைகள், கல்விச் சேவைகள், சமூக விழிப்புணர்வு மற்றும் சுகாதாரத் தகவல்கள் போன்றவற்றை வழங்குகிறது.

**பொழுதுபோக்கு:** பாடல்கள், நாடகங்கள், நேர்காணல்கள் மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகள் மூலம், மக்களுக்குப் பொழுதுபோக்கை அளிக்கிறது.

## தொலைக்காட்சி

ஒலி மற்றும் ஒளி இரண்டையும் ஒருங்கிணைத்து வழங்கும், மிகவும் செல்வாக்குப் பெற்ற ஒரு ஊடகம், தொலைக்காட்சி.

**காட்சி மற்றும் செவி வழி கற்றல்:** பார்க்கும் மற்றும் கேட்கும் அனுபவத்தை அளிப்பதால், உலக நடப்புகள், கல்வி சார்ந்த விஷயங்கள் மற்றும் சிக்கலான செய்திகளை மக்களுக்கு மிகவும் தெளிவாகவும் ஆழமாகவும் கொண்டு சேர்க்கிறது.

**பொது அறிவு மற்றும் பொழுதுபோக்கு:** வீட்டுக்குள்ளேயே இருந்து, உலகச் செய்திகள், திரைப்படங்கள், விளையாட்டுகள், விவாத நிகழ்ச்சிகள் மற்றும் ஆவணப்படங்கள் மூலம் அறிவையும் பொழுதுபோக்கையும் வழங்குகிறது.

**விளம்பரங்களின் தாக்கம்:** வணிகம் மற்றும் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒளி, ஒலி மற்றும் காட்சிக் கலவையால், விளம்பரங்கள் மக்களை அதிக அளவில் ஈர்க்கின்றன.

**உடனுக்குடன் ஒளிபரப்புதல்:** முக்கிய நிகழ்வுகள், தேர்தல்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை நேரடியாக ஒளிபரப்பி, உலகை மக்கள் கண்முன் கொண்டு வருகிறது.

மக்கள் ஊடகம் 6

## திரைப்படங்கள்

கதை, கலை மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஆற்றல் மிக்க ஒரு காட்சி ஊடகம் தான், திரைப்படங்கள்.

**கலை மற்றும் பொழுதுபோக்கு:** சிறந்த கதைசொல்லல், இசை மற்றும் காட்சி அமைப்புகள் மூலம், மிகப்பெரிய பொழுதுபோக்கு சாதனமாக விளங்குகிறது.

**சமூக மாற்றம் மற்றும் விழிப்புணர்வு:** சமூகப் பிரச்னைகள், அரசியல் கருத்துகள், வரலாற்று நிகழ்வுகள் மற்றும் கலாசார மதிப்புகள் போன்றவற்றை மையமாகக்கொண்டு, மக்களிடையே சிந்தனையையும் விவாதத்தையும் தூண்டி, சமூக மாற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன.

**கலாசாரப் பிரதிபலிப்பு:** ஒரு சமூகத்தின் அல்லது நாட்டின் கலாசாரத்தையும், மொழியையும் உலக அளவில் எடுத்துச் செல்லும் முக்கியக் கருவியாகத் திகழ்கிறது.

**மொழியின் வளர்ச்சி:** ஆரம்ப காலத் திரைப்படங்களில் வசனங்களுக்கும், சிறந்த உரையாடல்களுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டு, மொழியின் வளர்ச்சிக்கும் பங்களித்துள்ளன.

# ஆன்லைன் உலகைப் பாதுகாக்கும் வித்தைகள்!

இன்றைய டிஜிட்டல் உலகில், நம் தகவல்களையும், சாதனங்களையும் பாதுகாப்பாக *(Digital Security)* வைத்திருப்பது மிகவும் முக்கியம். அதாவது, உங்கள் வீட்டிற்குப் பூட்டு, ஜன்னல்கள் இருப்பது போல், உங்கள் டிஜிட்டல் தகவல்களுக்கும் பாதுகாப்பு தேவை.

## உங்கள் டிஜிட்டல் உலகைக் காக்கும் விஷயங்கள்

**ரகசியத் தகவல் காவலர்கள்** (Information Security): உங்கள் புகைப்படங்கள், கடவுச்சொற்கள், இமெயில்கள் போன்ற முக்கியமான தகவல்களை யாரும் திருடாமல், அழிக்காமல் பாதுகாப்பதே இதன் வேலை.

**வலையமைப்பின் சுவர்** (Network Security): உங்கள் கணினி இணையத்துடன் இணைந்திருக்கும் வழியைப் (நெட்வொர்க்) பாதுகாப்பது. இதன்மூலம், திருடர்கள் (ஹேக்கர்கள்) உங்கள் நெட்வொர்க்குக்குள் நுழையாமல், ஃபயர்வால் *(Firewall)* என்ற சுவர் பாதுகாக்கிறது.

டிஜிட்டல் குடியுரிமை 6

**செயலி பாதுகாப்பு** (Application Security): நீங்கள் பயன்படுத்தும் மொபைல் ஆப்ஸ் மற்றும் மென்பொருட்களில் உள்ள ஓட்டைகளை அடைத்து, அவற்றை பலப்படுத்துவதே இதன் பணி.

## நீங்கள் செய்ய வேண்டியவை:

- உங்கள் வீட்டுக் கதவுக்கு ஒரு சாதாரணச் சாவிக்குப் பதிலாக, நீண்ட மற்றும் சிக்கலான சாவியைப் பயன்படுத்துங்கள். அதாவது, கடவுச்சொற்கள் நீளமாகவும், எண்கள், குறியீடுகள் (@, #, $) மற்றும் பெரிய/சிறிய எழுத்துக்கள் கலந்தும் இருக்க வேண்டும்.
- கடவுச்சொல் ஒரு பூட்டு என்றால், உங்கள் போனுக்கு வரும் *OTP (OneTime Password)* இரண்டாவது பூட்டு. இது, பாதுகாப்பை இரட்டிப்பாக்கும்.
- உங்கள் கணினி/மொபைல் மென்பொருளை அடிக்கடி, புதுப்பிக்க *(Update)* வேண்டும். இது, பழைய ஓட்டைகளை அடைத்து, புதிய பாதுகாப்பு சாவிகளைப் பூட்டுவது போன்றது.
- அவசரமான அல்லது பயமுறுத்தும் மின்னஞ்சல்கள் வந்தால் சந்தேகியுங்கள். தெரியாத லிங்க்குகளை அல்லது ஃபைல்களைத் திறக்காதீர்கள்.
- உங்கள் முக்கியமான தகவல்களைக் குறியாக்கம் *(Encrypt)* செய்வதன் மூலம், அவை திருடப்பட்டாலும், அந்தத் திருடனுக்குப் புரியாத ஒரு ரகசிய மொழியாக *(Code)* இருக்கும்.

## உங்களைத் தாக்கும் தீய சக்திகள்

**வைரஸ்/மால்வேர்** (Malware): கணினிக்குத் தீங்கு விளைவிக்கும், தீங்கிழைக்கும் மென்பொருட்கள்.


**ராண்சம்வேர்** (Ransomware): உங்கள் கோப்புகளைப் பூட்டிவிட்டு, அவற்றைத் திறக்கப் பணம் (மீட்புத் தொகை) கேட்கும் ஒரு வகை மால்வேர்.

**டி.டி.ஓ.எஸ் தாக்குதல்** (DDoS Attack): ஒரு இணையதளத்திற்கு, ஒரே நேரத்தில் பல லட்சம் பேர் ட்ராஃபிக்கை அனுப்பி, அந்த தளத்தை ஸ்தம்பிக்க வைப்பது.

***டிஜிட்டல் பாதுகாப்பு என்பது, எப்போதும் விழிப்புடன் இருப்பது. புதிய அச்சுறுத்தல்களைப் பற்றி தெரிந்துகொண்டு, புத்திசாலித்தனமாக செயல்பட்டால், உங்கள் டிஜிட்டல் உலகம் எப்போதும் பாதுகாப்பாக இருக்கும்.***



# இரு ரேகைகளும் வறட்சியும்




பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் இரவும் பகலும் உண்டாகின்றன, மேலும் சூரியனைச் சுற்றி வருவதால் ஓராண்டு நிறைவடைகிறது. பூமி சுற்றும் போது, வட துருவமும் தென் துருவமும் நிலையாக இருப்பதில்லை. மாறாக, கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு வட துருவம் சூரியனை நோக்கிச் சாய்ந்தும், அடுத்த ஆறு மாதங்களுக்கு தென் துருவம் சூரியனை நோக்கிச் சாய்ந்தும் காணப்படுகிறது. இந்தச் சாய்வுதான் சூரியன் சில மாதங்களில் வடகிழக்கிலும் சில மாதங்களில் தென்கிழக்கிலும் உதிப்பதற்குக் காரணம். இந்தச் சாய்வு நிகழ்வே உத்தராயணம் மற்றும் தட்சிணாயணம் என்று அழைக்கப்படுகிறது. இதுவே பூமியில் வெயில் காலமும் குளிர்காலமும் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம்.

பூமியின் சுழற்சி மாறினாலும், ஓர் ஆண்டு முழுவதும் சூரியனின் நேரான கதிர்கள் பூமத்திய ரேகையில் (*Equator*) விழுந்து கொண்டே இருக்கும். இதனால் பூமத்திய ரேகை பகுதிகளில் தினமும் மழை பெய்யும். நல்ல சூரிய வெளிச்சமும் அபரிமிதமான மழையும் கிடைப்பதால், இந்தப் பகுதிகள் அடர்ந்த காடுகளாக உள்ளன. உதாரணம்: அமேசான் மற்றும் காங்கோ காடுகள்.

அதேநேரம், உலகின் பெரும்பான்மைப் பாலைவனங்கள் கடக ரேகை (*Tropic of Cancer*) மற்றும் மகர ரேகை (*Tropic of Capricorn*) ஆகிய பகுதிகளில் ஒரே நேர்க்கோட்டில் அமைந்திருப்பதைக் காணலாம்.

### மகர ரேகை (தெற்கில்)

தென் அமெரிக்காவின் அட்டகாமா, ஆப்பிரிக்காவின் நமீபிய பாலைவனம், மற்றும் ஆஸ்திரேலியாவின் பெரும்பான்மையான அரைப் பாலைவனப் பகுதிகள் இந்தப் பகுதியில் வருகின்றன.

### கடக ரேகை (வடக்கில்)

வட அமெரிக்காவின் தென்பகுதி, மெக்சிகோ பகுதிகள், உலகின் மிகப்பெரிய பாலைவனமான சஹாரா, அரேபிய பாலைவனம், ஈரான் வரண்ட நிலங்கள், மற்றும் இந்தியாவின் தார் பாலைவனம் இந்தப் பகுதியில் அமைந்துள்ளன.

–பூவராஹன்

### காரணம் என்ன?

கடக, மகர ரேகை பாய்கின்ற பகுதிகளில் சூரியனின் கதிர்கள் சாய்வாகவே விழும். இதனால் பூமத்திய ரேகை பகுதிகளில் உள்ளது போல இங்கே அதீத சூரிய ஆற்றல் கிடைப்பதில்லை. மேலும், இந்தப் பகுதிகளில் காற்றின் ஈரப்பதம் குறைவாக இருப்பதால், மேகங்கள் உருவாகி மழை பொழிவது குறைவாகவே இருக்கும். இந்தக் காரணத்தினாலேயே, உலகின் பெரும்பான்மைப் பாலைவனங்கள் இந்த இரண்டு ரேகைகளில் குவிந்துள்ளன.

# இந்தியா பாலைவனமாகாதது எப்படி?

சஹாரா முதல் ராஜஸ்தான் வரையிலான பாலைவனங்கள் ஒரே நேர்க்கோட்டில் தொடர்ச்சியாக இருக்கும்போது, அதே நேர்க்கோட்டில் இருக்கும் இந்தியாவின் உத்தரப் பிரதேசம், பீகார், வங்காளம், வங்கதேசம், மியான்மர், மற்றும் சீனாவின் தென்பகுதி ஆகியவற்றில் ஏன் பாலைவனம் இல்லை என்ற சந்தேகம் எழுகிறது.

இதற்குக் காரணம் இமயமலைத் தொடர் தான். உலகின் மிக உயரமான சிகரங்களைக் கொண்ட நீண்ட இமயமலைத் தொடரின் பனி கோடைகாலத்தில் உருகி, கங்கை, சிந்து போன்ற பெரிய ஜீவ நதிகளை உற்பத்தி செய்கிறது. இமயமலை, இந்தியப் பெருங்கடலில் இருந்து வீசுகின்ற தென்மேற்குப் பருவக் காற்றைத் தடுத்து நிறுத்தி, வட இந்தியப் பகுதிகளில் கனமழையைப் பொழிவிக்கிறது. இந்த இரண்டு காரணங்களால், வட இந்தியப் பகுதிகள் பாலைவனமாக மாறுவதைத் தடுத்து, உலகின் மிகச் செழிப்பான விவசாய நிலங்களாக உள்ளன.

### நதிக்கரை நாகரிகங்கள், கங்கைப் பண்பாடு

உலகின் பழைய நாகரிகங்கள் அனைத்துமே ஜீவ நதிகளின் ஓரத்தில் அமைந்த செழிப்பான விவசாய நிலங்களில் தான் வளர்ந்தன. உலகின் மிகவும் வளமான பகுதிகளில் சிந்து – கங்கைச் சமவெளிகளுக்கு முதல் இடம் உண்டு. இங்குதான் சிந்து சமவெளி நாகரிகமும் மற்றும் பின்னர் கங்கைக்கரை நாகரிகமும் வளர்ந்தன.

### கங்கை நாகரிகத்தின் தாக்கம்

சிந்து நாகரிகம் அழிந்தாலும், கங்கை நாகரிகம் அழியாமல் தொடர்ந்து, இன்று நாம் காணும் இந்தியப் பண்பாட்டுக்கு அடிப்படையாக மாறியது. செழிப்பான விவசாயம் காரணமாக மக்கள் தொகை பெருகி, வணிகம் செழித்து பேரரசுகள் உருவாயின. இதன் விளைவாக, சமயம், தத்துவம், கலை, விஞ்ஞானம், கணிதம் என அனைத்துத் துறைகளும் இந்தப்



பகுதியில் வளர்ச்சி அடைந்தன. நவீன விஞ்ஞான உலகம் ஐரோப்பாவில் தோன்றுவதற்கு முன்பாக, ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு அடித்தளமாக கங்கைக்கரை நாகரிகத்தின் கண்டுபிடிப்புகள் இருந்தன. இன்று நாம் காணும் உலகை வடிவமைப்பதில் கங்கைக்கரைக்கு மிகப்பெரிய பங்கு உள்ளது.

– கருடா

# நயம் நயம் நாட்டுப்புறம்



செம்மையான கலைகள் ஒரு புறம் நம்மை ஈர்க்கும். தமிழிசை, பரதம் போன்றவை. மற்றொரு புறம் கிராமியக் கலைகளும் நிகழ்த்தப்பட்டுவரும். கிராமப்புறங்களில் கால காலமாக மக்களை மகிழ்விக்கும் கலைகளை நாட்டுப்புறக் கலைகள் எனவும் சொல்லலாம்.

அவற்றில் முதன்மையாக இருப்பது நாட்டுப் பாட்டு, அல்லது நாட்டுப்புறப் பாடல்கள்.

நம் வாழ்வின் எல்லாப் பருவத்துக்கும் ஏற்றவாறு நாட்டுப்புறப் பாடல்கள் உள்ளன. பிறந்த உடன் தாலாட்டுப் பாட்டு. இதுவும் கிராமிய இசை வடிவம்தான்.

அது தவிரவும், கும்மிப் பாடல், வாழ்த்துப் பாடல், ஒப்பாரிப் பாடல், நையாண்டிப் பாடல், கதைப் பாடல் என்று எத்தனையோ பிரிவுகள் உள்ளன.

தொழில் செய்யும் இடங்களில் பாடுவதற்கேற்ற மீனவர் பாடல், நெல் குத்திப் பாடல், நடவுப் பாடல், ஏற்றப் பாடல் என வித விதமாக நாட்டுப்புறப் பாடல்கள் மக்களால் பாடப்படுகின்றன.

பாடிக்கொண்டே விளையாடுவதற்கான பாட்டுகளும் உண்டு. அவற்றில் ஒன்றை இங்கே பார்ப்போம்.

**ஆலையிலே சோலையிலே**
**ஆலங்காடிச் சந்தையிலே**
**கிட்டிப் புள்ளும் பம்பரமும்**
**கிறிக்கியடிக்கப்**
**பாலாறு, பாலாறு, பாலாறு**
**ஆத்துக்கட்டு அலம்பக்கட்டு**
**அவிட்டுக்கட்டு இறுக்கிக்கட்டு**
**இறுக்கிக்கட்டு இறுக்கிக்கட்டு**
**கீழாறோலை மேலாறோலை**
**எண்ணிப் பார்த்தால் - பதினாறோலை**
**கிட்டிப் புள்ளும் பம்பரமும்**
**கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு பாலாறு**

**இது ஒரு விளையாட்டுப் பாட்டு.**

இது போன்ற பாடல்களில் முதன்மையாக இருப்பது, ஓசை நயம். ‘ஆலையிலே சோலையிலே’, ‘ஆத்துக் கட்டு அலம்பக் கட்டு’, அவுத்துக் கட்டு இறுக்கிக் கட்டு’, ‘கீழாறோலை மேலாறோலை’ போன்ற சொற்களில் எதுகை, மோனை, சந்தம் போன்ற நயங்கள் இயைந்து வருவதைக் காணலாம்.

தாளக்கட்டோடு இந்தப் பாடலைப் பாடும்போது உற்சாகமும் ஊக்கமும் நமக்குள் மிகுந்து வருவதை உணர முடியும்.

இதனாலேயே, மகிழ்வோடு விளையாடும் பொழுதுகளில் இந்தப் பாட்டை உரத்த குரலில் சிறுவர்கள் பாடுவார்கள்.

# ஆலவாய் தெரியுமா?

தமிழ்நாட்டில் பல நகரங்கள் பெரும் புகழ் பெற்றவை. அந்நகரங்களின் சிறப்புகளை ஒட்டி அவற்றிற்குப் பல பெயர்கள் இருப்பதுண்டு.

அதிகாரப்பூர்வமாக ஒரு பெயர் இருக்கும். ஆனால், கர்ணபரம்பரைக் கதை, புராணம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்புப் பெயர்களும் இருக்கும்.

தென் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நகரமான மதுரைக்கு வேறு என்னென்ன பெயர்கள் இருக்கின்றன என்று இங்கே பார்ப்போம்.

**திருஆலவாய்:** இது தேவாரத்திலும் திருவாசகத்திலும் குறிப்பிடப்படும் பெயர்.

**நான்மாடக்கூடல்:** நான்கு மாடங்கள் கூடும் ஒரு பெரிய ஆலயத்தைக் கொண்டிருப்பதால் இந்தப் பெயர் வந்தது.

**கடம்பவனம்:** கடம்ப மரங்கள் நிறைந்த காடாக இருந்தது இந்த நகரம். அதனால் இந்தப் பெயர்.

**கூடல்:** தெற்குத் தமிழ் நாட்டின் பல ஊர்கள் இங்கே சாலை மார்க்கமாக வந்து கூடுவதால் கூடல் என்று ஆனது.

**மல்லிகை மாநகர்:** மல்லிகை பூக்கள் அதிகம் விளையும் நகரம் என்பதால்.

**வைகை நகரம்:** வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ளதால்.

**தென்மதுரை:** தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளதால். வட இந்தியாவில் ‘மதுரா’ என்னும் பெயரில் ஒரு நகரம் இருப்பதை நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

**பூலோக கைலாயம்:** மீனாட்சி அம்மையுடன் சிவபெருமான் இங்கு வசிப்பதாகக் கருதப்படுவதால், இந்தப் பெயர் பெற்றது.

**சிவநகரம்:** சிவபெருமானின் நகரம்.

**பொற்கூடல்:** தங்கத்தால் ஆன கூடல் என்று இதன் பொருள்.

**மலை நகரம்:** இது மலைகளால் சூழப்பட்ட ஒரு நகரம்.



# வேடிக்கைப் பேச்சும் தீவிரப் பணியும்

தமிழறிஞர்களில் முக்கியமான ஒருவர் கி.வா.ஜகந்நாதன்.

இவர், இரு பொருள்படப் பேசும் சிலேடைப் பேச்சுக்குப் புகழ் பெற்றவர். இவரது சிலேடைப் பேச்சுகள் மிகவும் வேடிக்கையாக இருக்கும். ‘பணம் கொடுத்து ஏ.சி. ரூம் புக் பண்ணு’ என்போம் இல்லையா, இதை கி.வா.ஜ. எப்படிச் சொல்வார்? ‘சில்லறை கொடுத்து சில்லறை அணியம் செய்’ என்பார். சில்லறை = பணம்; சில் + அறை = குளிர்ந்த அறை.

இப்படி வேடிக்கையாகப் பேசுவதால் இவரை நகைச்சுவையாளர் என்று முத்திரை குத்திவிட முடியாது. மிகப் பெரிய தமிழ்ப் புலவர் இவர்.


ஜகந்நாதன்

மாநிலக் கல்லூரியில் புகழ்பெற்ற இலக்கிய அறிஞர் ரா.ஸ்ரீ.தேசிகனின் மாணவர் இவர். ‘தமிழ்த்தாத்தா’ உ.வே. சாமிநாதய்யரின் வழிகாட்டலில் தமிழ்ப் புலவர் தேர்வெழுதி மாநிலத்திலேயே முதலிடம் பெற்று வென்றார்.

கரூருக்கு அருகிலுள்ள கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் பிறந்தார். நாமக்கல்லில் இருந்த திண்ணைப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்றார். வாங்கல், குளித்தலை பள்ளிகளில் கல்வியைத் தொடர்ந்தார். உயர்நிலைக் கல்வியை முடிப்பதற்குள் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. கல்லூரிக்குச் செல்ல முடியவில்லை. வீட்டிலேயே தமிழ் நூல்களைக் கற்றார்.

தன் 22ஆவது வயதில் காந்தமலை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற திருவிழாவில் கி.வா. ஜகந்நாதன் ஒரு சொற்பொழிவை ஆற்றினார். அதைக் கேட்ட சேந்தமங்கலம் சுயம்பிரகாச சுவாமிகள் இவருக்கு அந்த ஊரிலேயே வேலை போட்டுக் கொடுத்தார். அங்கே, தொடர்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். ஆசிரமப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார்.

அக்காலத்தில் சேந்தமங்கலத்திற்கு வந்திருந்த ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார் சுவாமிகளிடம் தமிழ் பயில விரும்பி விண்ணப்பித்தார். அவர் கி.வா. ஜகந்நாதனிடம் உ.வே.சாமிநாதய்யரிடம் சென்று தமிழ் பயிலும்படி ஆலோசனை சொன்னார். உ.வே. சாமிநாதய்யர் அப்போது சிதம்பரத்தில் தமிழாசிரியராக பணிபுரிந்து வந்தார். சிதம்பரம் சென்று தன் விருப்பத்தை உ.வே. சாமிநாதய்யரிடம் கி.வா. ஜகந்நாதன் தெரிவித்தார். உ.வே. சாமிநாதய்யர் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராக செல்லவிருப்பதாகவும் தன்னுடன் வந்து உடனிருந்து தமிழ் பயிலும்படியும் கி.வா. ஜகந்நாதரிடம் சொன்னார். ஆசிரியருடன் கி.வா. ஜகந்நாதன் சென்னைக்குச் சென்று அவர் இல்லத்திலேயே தங்கினார். தமிழிலக்கியங்களை உ.வே. சாமிநாதய்யரிடம் பாடம் கேட்டார். அவருடைய பதிப்பு, ஆய்வுப்பணிகளுக்கு உதவினார்.

**விளையாட்டு**

# காலைத் தூக்கி ஆளைத் தாக்கும் வித்தை!



**சி**னிமாக்களில் அல்லது சண்டை போடும்போது, காலை உயரமாகத் தூக்கி வேகமாக எதிராளியைத் தாக்குவதைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? அதற்குத்தான், 'ஹைகிக்' (Highkick) என்று பெயர்.

### உருவானது எப்படி?

காலைச் செங்குத்தாகத் தூக்கி, எதிராளியை மிகவும் வேகமாகவும், ஆற்றலோடும் தாக்குவதுதான் ஹைகிக். கராத்தே, டேக்வாண்டோ போன்ற பல தற்காப்புக் கலைகளுக்கு இது ஒரு முக்கியமான அங்கம். இதைச் சரியாகச் செய்ய உடலில் வலிமை, நல்ல நெகிழ்வுத்தன்மை (flexibility) மற்றும் சரியான நுட்பம் தேவை.

பழங்காலத்தில் இருந்தே, தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், எதிரிகளைத் தாக்கவும், ஹைகிக் உத்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது. சீனா, இந்தியா மற்றும் கிரீஸ் நாட்டுச் சண்டை முறைகளில் இது முக்கியமாக இருந்தது. பொ.யு.மு. 2000ஆம் ஆண்டுகளில், ஷூவாய் ஜியாவோ (Shuai Jiao) போன்ற சீனத் தற்காப்புக் கலைகளில் இடம்பெற்றது.

பொ.யு.மு. 500களில், களரி போன்ற இந்தியத் தற்காப்புக் கலைகளிலும் இருந்தது. டேக்வாண்டோ மற்றும் கராத்தே போன்ற கலைகள், ஹைகிக்கைப் பிரபலப்படுத்தின. 1960களில், அனைத்துச் சண்டைக் கலைகளிலும், தவிர்க்க முடியாத ஓர் உத்தியாக மாறியது.

இப்போது, சண்டைப் போட்டிகள் மற்றும் சாகசக் காட்சிகளில், ஹைகிக் உலகப் புகழ் பெற்றுள்ளது.

### ஹைகிக் நுட்பங்கள்:

சரியான முறையில் ஹைகிக் போடுவதற்கு, நான்கு முக்கிய படிகள் உள்ளன:

**சேம்பரிங் (Chambering):** உதைப்பதற்கு முன், உங்கள் முழங்காலை (Knee) மேலே கொண்டு வந்து, உதைக்கும் இலக்கை எதிராளி பார்க்க முடியாத அளவுக்கு மறைத்து, சக்தியைத் தயார் செய்வது.


**இடுப்புச் சுழற்சி (Hip rotation):** இடுப்பை வேகமாகச் சுழற்றுவதன் மூலம், உதைக்குத் தேவையான கூடுதல் வேகத்தையும் விசையையும் கொடுப்பது.

**முழங்காலை நீட்டுதல் (Knee extension):** உங்கள் காலை முழுமையாக நீட்டி, இலக்கைத் தாக்கும்போது அதிகபட்சத் தாக்கத்தை ஏற்படுத்துவது.

**பாதங்களை உரிய நிலையில் வைப்பது (Foot positioning):** உங்கள் பாதத்தை இலக்கை நோக்கி இருக்குமாறு வைத்துக்கொண்டு, கால் விரல்களை மேல்நோக்கி வளைத்து வைப்பது.

–ஜி.வி.ரிதன்யா

## எந்தெந்தக் கலைகளில் பிரபலம்?



**கிக் பாக்ஸிங் (Kickboxing)**
இது குத்துச்சண்டையும் [Boxing] தற்காப்புக் கலையும் சேர்ந்தது. இதில், ஹைகிக் முக்கிய இடம் பெறுகிறது.




**கராத்தே (Karate)**
ஜப்பானியக் கலை. இதில், எதிராளியைப் பிடித்துக் கொள்ளும் உத்திகளுடன் ஹைகிக் பயன்படுத்தப்படுகிறது.



**டேக்வாண்டோ (Taekwondo)**
இது கொரியக் கலை. இதில், ஹைகிக்குகள் வேகமாகவும், அதிக ஆற்றலுடனும் பயன்படுத்தப்படுகின்றன.



**முவாய் தாய் (Muay Thai)**
இந்தக் கலையில், காலை மிக உயரமாகத் தூக்கித் தாக்கும் ஹைகிக் உத்திகள் உள்ளன.



**கபோயிரா (Capoeira)**
இது, பிரேசில் நாட்டு நடனம் போன்ற சண்டைக் கலை. இதில் ஆடல், வேகமாகச் சுழலும் அசைவுகள் மற்றும் குட்டிக் கரணத்துடன் ஹைகிக்கும் இருக்கும்.

---

**உடற்பயிற்சி**

# தரையில் படுத்துக்கொண்டே 'ஃபிட்' ஆகலாம்!

**பி**ட்டத் தசைகளையும், தொடை தசைகளையும் வலுப்படுத்த உதவும் ஒரு சிறந்த பயிற்சியே, க்ளூட் பிரிட்ஜஸ் (Glute Bridges) உடற்பயிற்சி. இது, இடுப்பு மற்றும் முதுகு ஆரோக்கியத்திற்கும் நன்மை அளிக்கிறது.

### எப்படிச் செய்வது?

**நிலை 1:**

- தரை விரிப்பில் மல்லாந்து படுத்துக் கொள்ளவும்.
- முழங்கால்களை மடக்கி, பாதங்களை தரையில் உறுதியாக வைக்கவும்.
- பாதங்கள் பிட்டத்திற்கு அருகில் இருக்க வேண்டும்.
- கைகளை உடலின் பக்கவாட்டில் தரையில் படும்படி நீட்டி வைக்கவும்.



**நிலை 2:**

- இப்போது, பிட்டத் தசைகளையும், வயிற்றுத் தசைகளையும் இருக்கமாகப் பிடித்துக் கொள்ளவும்.
- மெதுவாக இடுப்பைத் தரையிலிருந்து மேலே உயர்த்தவும்.
- தோள்பட்டை, இடுப்பு மற்றும் முழங்கால்கள் ஒரே நேர் கோட்டில் வரும் வரை உயர்த்தவும்.
- முதுகு வளைந்துவிடாமல் பார்த்துக் கொள்ளவும்.



**நிலை 3:**

- இதே நிலையில், 2 முதல் 3 வினாடிகள் வரை இருக்கவும்.
- இந்த அழுத்தம் உங்கள் பிட்டத் தசைகளில் வேலை செய்வதை நீங்கள் உணர வேண்டும்.

**நிலை 4:**

- மெதுவாக உங்கள் இடுப்பைத் தரைக்குக் கொண்டு வந்து ஆரம்ப நிலைக்கு வரவும்.
- குறிப்பிட்ட எண்ணிக்கையில், (10 முதல் 15 முறை) இதை மீண்டும் செய்யவும்.

### நன்மைகள் என்ன?

- பிட்டத் தசைகளைத் வலுப்படுத்த மிகவும் பயனுள்ள பயிற்சியாகும்.
- உடல் தோரணையை மேம்படுத்தி, நாள்பட்ட கீழ் முதுகு வலியைக் குறைக்க உதவுகிறது.
- இடுப்பின் இயக்கத்தை மேம்படுத்துவதால், ஓடுவது, குதிப்பது, மாடிப்படி ஏறுவது போன்ற அத்தியாவசியப் பலத்தைத் தருகிறது.
- வயிறு மற்றும் இடுப்புப் பகுதியில் உள்ள அதிகப்படியான கொழுப்பைக் குறைக்க உதவுகிறது.

### கவனிக்க வேண்டியவை

- இடுப்பை மேலே தூக்கும்போது, கீழ் முதுகைப் பின்னோக்கி வளைக்கக் கூடாது.
- அவசரப்படாமல், மெதுவாகவும் கட்டுக்கோப்புடனும் இந்தப் பயிற்சியைச் செய்ய வேண்டும்.
- இடுப்பைத் தூக்கும்போது, குதிகால்கள் தரையிலிருந்து விலகாமல், உறுதியாக இருக்க வேண்டும்.
- இந்த அடிப்படைப் பயிற்சியைச் சரியாகச் செய்ய நீங்கள் பழகிய பிறகு, ஒற்றைக் காலில் பிரிட்ஜ் செய்வது (Singleleg Bridge) போன்ற, வேறுபட்ட வடிவங்களையும் முயற்சிக்கலாம்.

# அமெரிக்க ஏற்றுமதியில் சற்று நிம்மதி

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், உலக நாடுகளில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் 200 உணவுப் பொருட்களின் மீதான இறக்குமதி வரியைக் கடந்த வாரம் நீக்கினார். அங்கே உள்நாட்டில் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு ஏற்படுவதாலும், அதனால், அதன் விலைகள் அதிகரித்துள்ளதாலும், இத்தகைய நடவடிக்கையை அவர் எடுத்துள்ளார் என்று சொல்லப்படுகிறது.

இதனால், நமது நாட்டில் இருந்து வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வோர் கொஞ்சம் நிம்மதி அடைந்துள்ளனர். குறிப்பாக காபி, தேயிலை, நறுமணப் பொருட்கள், முந்திரி உள்ளிட்டவற்றை ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஐரோப்பிய யூனியன் நாடுகள், வியட்நாம் உள்ளிட்ட நாடு மீது அமெரிக்கா, 15 முதல் 20 சதவீத இறக்குமதி வரியை விதித்தது. ஆனால், இந்தியா மீதோ 50 சதவீத வரியை விதித்தது. இதனால், பல்வேறு துறை சார்ந்த ஏற்றுமதியாளர்கள் பாதிப்படைந்தனர். குறிப்பாக செப்டம்பர் மாதத்தில், நமது நாட்டில் இருந்து செய்யப்பட்ட ஏற்றுமதியின் அளவு 12 சதவீதம் அளவுக்குக் குறைந்துபோனதாக ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது.

இந்த நிலையில், தற்போது உணவுப் பொருட்களின் மீதான வரி நீக்கத்தினால், கணிசமான லாபம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு



ஏற்பட்டுள்ளது. ஆனால், இன்னொரு விஷயமும் பேசப்படுகிறது. 200 உணவுப் பொருட்களின் மீதான வரி நீக்கத்தினால் பெரிய அளவில் பலன் பெறப் போவது, லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க மற்றும் ஆசியான் நாடுகள் தான்.

மேலும் இந்திய ஏற்றுமதிகளுக்கு 25 சதவீத பரஸ்பர வரியில் இருந்து விலக்கு அளிக்கப்படுமா அல்லது முழு 50 சதவீத வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா என்பது உடனடியாகத் தெளிவாகத் தெரியவில்லை.

மேலும் வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் போக்குவரத்துச் செலவையும் தானே ஏற்றுக்கொண்டு, சரக்குகளை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கின்றன. இத்தகைய வசதியை இந்திய ஏற்றுமதியாளர்களால் செய்து கொடுக்க முடியுமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

ஆனால், ஒரு விஷயம் அனைவர் கவனத்தையும் கவர்ந்துள்ளது. அமெரிக்கா வெளிநாட்டுப் பொருட்களின் மீது விதிக்கும் இறக்குமதி வரியை ரொம்ப காலம் நீட்டிக்க முடியாது. ஏதேனும் ஒரு சமாதானத்துக்கு அந்த நாடு வந்து தான் ஆகவேண்டும்.

அந்த வகையில் தான் தற்போது 200 உணவுப் பொருட்களின் மீதான வரி முழுமையாக நீக்கப்பட்டிருக்கிறது. இந்தியா மேற்கொண்டு வரும் இருதரப்புப் பேச்சுவார்த்தை பலன் அளிப்பதற்கான வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாக நிபுணர்கள் கருதுகிறார்கள்.

## தொடரும் ரஷ்ய எரிபொருள் இறக்குமதி

டொனால்டு டிரம்பின் மிரட்டலையும் மீறி, நமது நாடு, கடந்த அக்டோபர் மாதத்தில், ரஷ்யாவிடம் இருந்து பெருமளவு எரிபொருட்களை இறக்குமதி செய்துள்ளது. ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதாலேயே நம் நாட்டுப் பொருட்களின் மீது அமெரிக்கா 25 சதவீத இறக்குமதி வரி விதித்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

மேலும், இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதைக் கணிசமாகக் குறைத்துவிட்டது என்று டிரம்ப் சொல்லிவருகிறார். ஆனால், அக்டோபர் மாதத்தில் மட்டும், இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து 3.19 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு எரிபொருட்களை இறக்குமதி செய்தது. இதற்கு முந்தைய மாதமான செப்டம்பரில் செய்யப்பட்ட 3.70 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இறக்குமதியை விட இது குறைவு தான்.

கச்சா எண்ணெய், நிலக்கரி, எண்ணெய்ப் பொருட்கள் ஆகியவை ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இதில் கச்சா எண்ணெய் மட்டும் கடந்த செப்டம்பரை விட அக்டோபரில் 11 சதவீதம் கூடுதலாக இறக்குமதி செய்யப்பட்டது. நமது நாட்டில் இருக்கும் தனியார் சுத்திகரிப்பாளர்கள், மொத்த இறக்குமதியில் மூன்றில் இரண்டு மடங்கு அளவுக்கு இறக்குமதி செய்தனர். அரசுத் துறை சுத்திகரிப்பாளர்களோ, தங்கள் இறக்குமதியை இரட்டிப்பாக்கியுள்ளனர்.

# குறைந்தது மொத்த பணவீக்கம்; வட்டி குறையுமா?

உணவுப் பொருட்கள், கச்சா பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, மின்சாரம், கனிம எண்ணெய்கள், அடிப்படை உலோகங்கள் ஆகியவற்றின் விலைகள் குறைந்ததால், அக்டோபர் மாதத்தில் நமது நாட்டின் மொத்த விலை பணவீக்கம் (WPI) மீண்டும் குறைந்தது.

மொத்த விலைக் குறியீட்டு பணவீக்கமானது, கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் 2.75 சதவீதமாக இருந்தது. அது இந்த அக்டோபரில், 27 மாதங்களில் இல்லாத அளவுக்கு மைனஸ் 1.21 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதே போன்று மைனஸ் 1.2 சதவீதமாக முன்பு இருந்தது ஜூலை 2023இல் தான்.

கடந்த ஆறு மாதங்களில் மொத்த விலைப் பணவீக்கம் மூன்றாவது



முறையாக மைனஸில் இருக்கிறது. ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் முறையே மைனஸ் 0.19 மற்றும் மைனஸ் 0.58 என்று இருந்தன.

தரவுகளின்படி, உணவுப் பொருட்களின் பணவாட்டம் செப்டம்பரில் 5.22 சதவீதமாக இருந்த நிலையில், அக்டோபரில் காய்கறிகள், வெங்காயம் மற்றும் பழங்களின் விலைகள் மேலும் குறைந்ததால், 8.31 சதவீதமாக சரிந்தது.

சாதகமான அடிப்படை விளைவு, காய்கறிகள், தானியங்கள், பழங்களின் விலையில் ஏற்பட்ட சரிவு மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) குறைப்பின் காரணமாக, அக்டோபர் மாதத்தில் சில்லறை பணவீக்கம் 0.25 சதவீதமாக ஏற்கெனவே குறைந்துள்ளது.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை சாதகமாக இருப்பது, உணவு தானியங்களின் போதுமான கையிருப்பு மற்றும் ஆரோக்கியமான கரீப் அறுவடை காரணமாக மொத்த விலை பணவீக்கம் பெரிய அளவில் உயர வாய்ப்பில்லை என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

சில்லறை பணவீக்கம் மற்றும் மொத்த விலை பணவீக்க விகிதங்களில் ஏற்பட்டுள்ள சரிவு காரணமாக, வரும் டிசம்பரில் வட்டி விகிதக் குறைப்புக்கான வாய்ப்பு இருப்பதாக வல்லுநர்கள் கூறுகிறார்கள். இந்திய ரிசர்வ் வங்கி அக்டோபரில் ரெப்போ விகிதத்தை 5.5 சதவீதமாக வைத்திருந்தது.

இது மேலும் குறையும் போது, தொழில் நிறுவனங்களும் தனியார்களும் வாங்கும் கடனுக்கான வட்டி விகிதம் மேலும் குறையும். அதன்மூலம், அந்தப் பணம், நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். வேலைவாய்ப்புகள் பெருக உதவும்.

அதனால் தான் நாம் மொத்த விலை பணவீக்கம் மற்றும் சில்லறைப் பணவீக்கம் இரண்டையும் தொடர்ச்சியாக கவனித்து வர வேண்டும்.

**செய்தி:** தூய நகரங்களிலும் காற்று மாசு உயர்கிறது

# தூய்மையான காற்று ஓர் ஆடம்பரமா?

சில ஆண்டுகளுக்கு முன்பு, காற்று மாசு என்பது, பெருநகரங்களின் பிரச்னையாகவே இருந்தது. ஆனால், இன்று, தூய்மையான நகரங்களாகக் கருதப்பட்ட இடங்களிலும் காற்று மாசு அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

மிசோரமிலுள்ள ஐசால், காஷ்மீரத்திலுள்ள சோபோர், இமாச்சலப் பிரதேசத்திலுள்ள குலு போன்ற நகரங்களில் 2025க்கான வருடாந்திர 'காற்றுத் தரக் குறியீடு' (AQI) கடுமையாக மோசமடைந்துள்ளது. இங்கெல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் எட்டப்பட்ட சிறிய முன்னேற்றங்கள் மறைந்துவிட்டன.

சோபோரின் காற்றுத் தரக் குறியீடு 2023ஐ ஒப்பிடுகையில், மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. அதே சமயம் குலுவின் காற்றுத் தரக் குறியீடு 'மிதம்' என்ற பிரிவுக்குள் நுழைந்துள்ளது. ஜம்மூவிலுள்ள ரஜௌரி மற்றும் காஷ்மீரிலுள்ள ஐசால் பகுதிகள் கூட இப்போது 'மோசம்' என்ற பிரிவை நோக்கி நகர்கின்றன.

மாசுபாடு என்பது ஒரு குறிப்பிட்ட நகரத்தின் சவால் என்ற கருத்தை நாம் கைவிட வேண்டும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். செங்கல் சூளைகள், குப்பைப் பொருட்களை எரித்தல். டீசல் பம்புகள் மற்றும் தார் போடப்படாத சாலைகள் போன்றவை சிறு நகர்ப்புற இந்தியாவை புதிய மாசு உமிழ்வு மையங்களாக மாற்றி வருகின்றன, குறிப்பாக குளிர்காலங்களில்.



கடந்த 2025 ஜனவரியில் டில்லி நகரக் காற்றில் உள்ள துகள் அளவு பி.எம்.2.3வை எட்டியது. இது தேசிய வரம்பை விட நான்கு மடங்கு அதிகம். இதன் பாதிப்பு, ஒருவர் ஒரு நாளைக்கு 11 சிகரெட்டுகளை புகைப்பதற்குச் சமம். தூய்மையான காற்று ஓர் அரிய ஆடம்பரமாக மாறி வருகிறது. ●

**செய்தி:** அமலாகிறது தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம்

# என் தகவல்கள் எனக்கே சொந்தம்

இந்த டிஜிட்டல் யுகத்தில், தனிநபரின் பின்னணித் தகவல்கள் விலைமதிப்பில்லாதது. அதைப் பெறும் எவரும், அந்த நபருக்கு ஊறு விளைவிக்க முடியும். எனவேதான். தனிநபர் தகவல்களை பாதுகாப்பது அவசியமாகிறது. இதனால், மத்திய அரசு இந்தியாவின் முதல் டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை அறிவித்துள்ளது. இது டிஜிட்டல் இந்தியாவில் உள்ள குடிமக்களின் தனிப்பட்ட தரவுகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை நிறுவுகிறது. ஆனால், இந்தச் சட்டத்தின் முக்கியமான அம்சங்கள் நடைமுறைக்கு வர 18 மாதங்கள் வரை ஆகும்.

இந்த விதிகளின் கீழ், தரவுகளைச் சேகரிக்கும் நிறுவனங்கள் (Data Fiduciaries) தனிநபரின் ஒப்புதலை பெற வேண்டும். மேலும், அவர் விரும்பினால், இந்த ஒப்புதலை எந்த நேரத்திலும் திரும்பப் பெறும் உரிமையும் அவருக்கு உண்டு. இந்த சட்டத்தின்படி ஒவ்வொரு நிறுவனமும் ஒரு தரவுப் பாதுகாப்பு அதிகாரியை நியமிக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தை அமல்படுத்தவும், விதிகளை மீறும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கவும், சுதந்திரமான ஓர் அமைப்பான இந்தியத் தரவுப் பாதுகாப்பு வாரியம் (Data Protection Board of India – DPBI) உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தரவுகளை திருத்தவும், நீக்கவும் கோரும் தனிநபரின் உரிமைகள் வலுப்படுத்தப்படுகின்றன.

இந்தப் புதிய சட்டம், குடிமக்களின் தனிநபர் உரிமையைப் பாதுகாப்பதற்கும், டிஜிட்டல் பொருளாதாரத்தின் தேவைகளைச் சமநிலைப்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது. இந்தியாவின் டிஜிட்டல் சேவைகள் மற்றும் வணிகங்களின் செயல்பாட்டில் இது ஓர் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தும். ●



**செய்தி:** 2020 தேர்தலை விட 2025 தேர்தலில் நோட்டாவின் எண்ணிக்கை அதிகம்

# நோட்டா: வாக்காளரின் அமைதியான எதிர்ப்பு

பீகாரின் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை கவனித்திருப்பீர்கள். அந்த முடிவுகளில், வாக்காளர்கள் அமைதியான எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர். அதுதான், 'நோட்டா' (None of the Above – NOTA) வாக்குகள். பொத்தானை அழுத்தி வாக்களிக்கும் இயந்திரத்தில், கட்சிகளின் வேட்பாளர்களின், சுயேட்சை வேட்பாளர்களின் தேர்தல் சின்னங்கள் வரிசையாக இருக்கும். அதில் ஒரு பொத்தானுக்கு அருகே 'நோட்டா 'என்ற சொல்லும் இருக்கும்.

இது எதற்கு? மேற்கண்ட எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை என்று வாக்காளர் நினைத்தால், நோட்டா பொத்தானை அழுத்தலாம். இந்தப் பொத்தான் 2013இல் அறிமுகமானது. இதை அழுத்தும் வாக்காளர்களின் பெயர்கள் ரகசியமாக வைக்கப்படும்.

இந்த ஆண்டு, 1.81 சதவீத வாக்காளர்கள், அதாவது கிட்டத்தட்ட 6.66 லட்சம் பேர், 'நோட்டா'வை அழுத்தியுள்ளனர். இது 2020இல் பதிவான 1.68 சதவீதத்தை விட சற்றே அதிகம். ஆனாலும், உள்ளூர் அரசியல் மீதான அதிருப்தி ஆழமாக இருந்த 2015இல் பதிவான 2.48 சதவீதத்தைவிட குறைவுதான்.

இந்த எண்ணிக்கை சாதனை அளவிலான பங்களிப்புக்கு மத்தியில் வந்துள்ளது: 1951க்குப் பிறகு மிக அதிகபட்சமாக கிட்டத்தட்ட 67 சதவீத வாக்குப்பதிவு இங்கு நிகழ்ந்துள்ளது, இதில் பெண்களின் வாக்குப்பதிவு, முன்னெப்போதும் இல்லாத அளவு இருந்தது.

நோட்டா வாக்குகளால், தேர்தல் முடிவுகளை மாற்றவோ, மறுதேர்தலைத் தூண்டவோ முடியாது. பீகாரின் 243 தொகுதிகளில் 202இல் பா.ஜ.க., கூட்டணி வென்றது. ஆனாலும், நோட்டா வாக்குகள் பொது மனநிலைக்கு ஒரு அளவுகோலை வழங்குகிறது. தேர்தல்கள் வெற்றி பெறுபவர்களைப் பற்றியது மட்டுமல்ல, விரல்நுனியில் அதிருப்தியை வெளிப்படுத்தும் வாக்காளர்களைப் பற்றியதுமாகும். ●

# செஸ் உலகக் கோப்பை வரலாற்றில் சிறந்த ஆச்சரியங்கள்!

பிடே நடத்தும் செஸ் உலகக் கோப்பை போட்டிகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்பார்கள். இந்த ஆண்டும் கூட கோவாவில் நடைபெறும் போட்டியில் 206 பேர் கலந்துகொண்டு விளையாடி வருகிறார்கள்.

இந்த உலகக் கோப்பை போட்டிகளில், சாதாரண கிராண்ட்மாஸ்டர்களுக்கு உலகத் தரவரிசையில் முன்னணியில் இருக்கும் கிராண்ட்மாஸ்டர்களை எதிர்கொண்டு விளையாடும் வாய்ப்புக் கிடைக்கிறது.

முன்னணி கிராண்ட்மாஸ்டர்களை விட, நூற்றுக்கணக்கான புள்ளிகள் பின்தங்கி இருக்கும் சாதாரண கிராண்ட்மாஸ்டர்களுக்கு ஏராளமான தோல்விகள் ஏற்பட்டாலும், சில ஆட்டங்களில் அவர்கள் அற்புதமான வெற்றிகளையும் பதிவு செய்கிறார்கள். அப்படி வெற்றி பெற்ற, சிறந்த சில ஆச்சரிய ஆட்டங்களைப் பார்ப்போம்!

## 1] 367 புள்ளிகள் வித்தியாசம்



சிடும்போ மவாலி

2021 செஸ் உலகக் கோப்பை போட்டியில் கிராண்ட்மாஸ்டர் ஹைக் மார்டிரோஸ்யனை விட 367 புள்ளிகள் பின்தங்கி இருந்தார் சிடும்போ மவாலி (2281 புள்ளிகள்).

அனைவரும் எதிர்பார்த்தபடி, முதல் சுற்றின் முதல் ஆட்டத்தில் சிடும்போ மவாலி தோற்றார். அடுத்த ஆட்டத்தில் அவர் வெற்றி பெற்றால் மட்டுமே டைபிரேக் ஆட்டத்தில் அவரால் அடியெடுத்து வைக்க முடியும் என்ற நிலை இருந்தது.

சாதித்துக் காட்டினார். 40வது நகர்வில் கறுப்பு அணியில் விளையாடிய கிராண்ட்மாஸ்டர் ஹைக் மார்டிரோஸ்யன் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு 'ரிசைன்' (Resign) செய்தார்.

ஆட்டத்தின் கடைசி நகர்த்தல் இப்படி இருந்தது.

↓




அடுத்து விளையாடப்பட்ட டைபிரேக் ஆட்டத்தில், எதிர்பார்த்தபடி, அவர் ஹைக் மார்டிரோஸ்யனிடம் தோல்வியைத் தழுவி இருந்தாலும், சிடும்போ மவாலியின் அந்த வெற்றி, வரலாற்று சாதனையாக இன்றுவரை போற்றப்படுகிறது.

தன்னைவிட அதிகப் புள்ளிகள் கொண்ட கிராண்ட்மாஸ்டரை உலகக் கோப்பையில் வெல்வது சாதாரணக் காரியமல்ல!

## 2] 249 புள்ளிகள் வித்தியாசம்




லீவா ரோட்ரிக்ஸ்

2023இல் நடந்த உலகக் கோப்பை போட்டியில், பெரு நாட்டைச் சார்ந்த லீவா ரோட்ரிக்ஸ் (Leiva Rodriguez), தன்னைவிட 249 புள்ளிகள் அதிகம் பெற்றிருந்த கிராண்ட்மாஸ்டர் ஆண்டன் டெம்சென்கோவுடன் (2623 புள்ளிகள்) மோதினார்.

முதல் சுற்று முதல் ஆட்டத்திலேயே தனது வெற்றியைப் பதிவு செய்தார். இத்தனைக்கும் அப்போது கிராண்ட்மாஸ்டர் என்ற அந்தஸ்த்தைப் பெறாதவராக இருந்தவர் லீவா.

வெற்றிப் பெற்ற ஆட்டத்தின் அவரது 82வது நகர்வு இப்படி இருந்தது.

↓




இதில், வெள்ளை அணி வீரர் லீவா ரோட்ரிக்ஸ்.

இந்த ஆட்டத்திற்குப் பிறகு, அவர் இரண்டாவது ஆட்டத்தை டிரா செய்து, டைபிரேக் ஆட்டத்தை ஆடாமல், இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

## 3] அரை–இறுதியில்



வெலிமிர் ஐவிக்

2021 உலகக் கோப்பையில் பங்கேற்கும்போது, 2500 புள்ளிகளை வைத்திருந்தார் செர்பியாவின் வெலிமிர் ஐவிக்.

கிராண்ட்மாஸ்டராக இருந்தும் யாராலும் அறியப்படாத வீரராகவே இருந்தார்.


முதல் சுற்றில் அமெரிக்க கிராண்ட்மாஸ்டர் ராபர்ட் ஹங்காஸ்கியை எதிர்த்து விளையாடினார், இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி.

இரண்டாவது சுற்று, கடினமாக இருக்கும் என்று எதிர்பார்த்தார். ஏனெனில், அவர், 2710 புள்ளிகள் பெற்ற அனுபவம் வாய்ந்த சூப்பர் கிராண்ட்மாஸ்டர் வல்லேஜோ போன்ஸை எதிர்கொண்டார். மீண்டும், இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி.

அதனைத் தொடர்ந்து மூன்றாவது சுற்றிலும் வெற்றி.

நான்காவது சுற்றில், 2013 உலகக் கோப்பை இறுதி போட்டியில் விளையாடிய கிராண்ட்மாஸ்டர் டிமிட்ரி ஆண்ட்ரிகினுடன் விளையாடினார். 1–1 என வென்றதால் ஆட்டம் டைபிரேக் வரை சென்றது. கடைசி நேரத்தில் ஐவிக் வென்றார். அவரின் கடைசி நகர்த்தல் இப்படி இருந்தது.

↓




அதனைத் தொடர்ந்து ஐந்தாவது சுற்றிலும் வெற்றி. ஆறாவது சுற்றான அரையிறுதி ஆட்டத்தில் தோல்வியைத் தழுவினார்.

## 4] இறுதி போட்டியில் பிரக்!



பிரக்ஞானந்தா

நம் எல்லோருக்கும் இந்திய கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா தெரியும். அவர் 2013இல் நடந்த செஸ் உலகக் கோப்பை இறுதி ஆட்டத்தில், நம்பர் ஒன் செஸ் வீரர் மேக்னஸ் கார்ல்சனுடன் தோல்வி அடைந்தது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால், அந்த உலகக் கோப்பையில் அவர், பங்கேற்கும்போது அவரின் புள்ளிகள் 2690ஆக இருந்தன. உலகத் தரவரிசையில் 31வது இடத்தில் இருந்தார்.

இரண்டு சிறந்த அமெரிக்க வீரர்களான ஹிகாரு நகமுரா மற்றும் ஃபேபியானோ கருவானாவை வீழ்த்தியது பெரும் சவாலாகவே அவருக்கு அப்போது இருந்தது.

அரையிறுதி ஆட்டத்தில் அவர் கருவானாவை வீழ்த்தியபோது அவரின் 62வது நகர்வு இப்படி இருந்தது!

↓




மேற்கண்ட நான்கு வீரர்களும் பெரும் சவாலை எதிர்கொண்டு, அனைவரையும் ஆச்சரியப்படுத்தி, தங்களுக்கென்ற தனி சிறப்பை, செஸ் வரலாற்றில் பதிய வைத்திருக்கிறார்கள்.

### காரணம் என்ன?

அவர்களின் விடாமுயற்சி. போட்டியில் தன்னை முன்னிலைப் படுத்த வேண்டும் என்ற முனைப்பு, அவர்களை செஸ் வரலாற்றில் நீங்கா இடம்பிடிக்க வைத்துள்ளது!